# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW-10 | Taluk | : | |
| Name | : | திரு. மரு. தமிழ்மணி | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 06.10.2025**

A1 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. A2 present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தஞ்சாவூர், மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். இதே துறையில் கடந்த 25.5.2017 அன்று பணியில் இருந்தபோது தஞ்சாவூர் தெற்கு காவல்நிலைய ஆய்வாளர் அவரிகளின் வேண்டுகோள் கடிதத்தில் உள்ள கு.எண் 155/2017 வழக்கில் தொடர்புடைய சுமார் 32 வயது மதிக்கதக்க ரமேஷ் என்ற ஆண் பிரேதத்தை பரிசோதனை செய்வதற்காக காவலர் எண் 2100 திரு. மனோகரன் என்பவரிடமிருந்து மதியம் 3.10 மணியளவில் வேண்டுகோள் கடிதத்தை பெற்று அவர் பிரேதத்தை அடையாளம் காண்பிக்க அதே நாளில் மதியம் 3.20 மணியளவில் பிரேதத்தை பரிசோதனைக்கு உட்படுத்தினேன். அப்போது பிரேதமானது மிதமான உடல் வாகுடன் உடல் முழுவதும் மரண விறைப்பு தன்மையுடன் காணபட்டது. கை, கால் நகங்கள் வெளிரி போய் இருந்தது.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்

1) சாய்வான வெட்டுகாயம் 1X0.5 X1செ மீ அளவில் வலது கண் புருவத்தில இருந்தது.

2) சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயத்தின் அளவு 13X2செ மீ எலும்பு வரை ஆழத்தில் இடது முன் மற்றும் பக்கவாட்டு தலையில் காணபட்டது.

3) சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயத்தின் அளவு 6X2செமீ எலும்பு வரை ஆழத்தில் இடது பக்கவாட்டு மேல் தலை பகுதியில் காணபட்டது.

4) சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயத்தின் அளவு 13X4செமீ எலும்பு வரை ஆழத்தில் கழுத்தின் முன் நடுபகுதியில் காணபட்டது. இது அதன் கீழ் உள்ள ஒட்டிய இரத்தகுழாய்கள், நரம்புகள், மூச்சுகுழாய், உணவு குழாய், குரல்வலை மற்றும் கழுத்து எலும்பு எண் 5 ஆகியவற்றை வெட்டியிருந்தது. இந்த காயம் தாவாகட்டையிலிருந்து 7 செமீக்கு கீழாகவும், முன் கழுத்து குழியிலிருந்து 6 செமீ க்கு மேலாக காணபட்டது.

5) சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயத்தின் அளவு 8X4செமீ எலும்பு வரை ஆழத்தில் இடது கை மணிகட்டில் காணபட்டது. இது அதன் கீழ் உள்ள தசைகள், இரத்தகுழாய்கள், நரம்புகள், எலும்புகள் மற்றும் தசைநார்களை வெட்டியிருந்தது.

6) கோடுபோன்ற சிராய்ப்பு காயத்தின் அளவு 10 X0.5 செமீ அளவில் வலது பக்க முதுகு பகுதியில் காணபட்டது.

தலையை திறந்து பார்க்கையில் தலை தோல் முழுவதும் கன்றியிருந்தது. இடது பக்க தலை எலும்பு 12X4 செமீ அளவில் வெட்டுகாயத்தினால் உடைந்து போயிருந்தது. இந்த காயம் காயம் எண் 2 மற்றும் 3க்கு கீழாக காணபட்டது. பெருமூளை மற்றும் சிறுமூளை முழுவதும் இரத்தகசிவு இருந்தது. பெருமூளையின் கீழ் பகுதியில் இரத்தம் உறைந்த நிலையில் காணபட்டது. மூளை வீக்கத்துடன் இருந்தது.

மற்ற உடல் உள்ளுறுப்புகள் - இதயம் அதன் இரத்தகுழாய்கள் நல்லநிலையில் இருந்தது. நாவடி எலும்பு நல்லநிலையில் இருந்தது. இரைப்பை காலியாக இருந்தது. வாடை எதுவும் இல்லை. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான நிலையில் இருந்தது. சிறுகுடல் காலியாக இருந்தது, வாடை எதுவும் இல்லை. சிறுநீர்ப்பையில் 10மிலி அளவு சிறுநீர் இருந்தது. உடல் உள்ளுறுப்புகள் இராசாயன பகுப்பாய்விற்கு அனுப்பிவைக்கபட்டது. பகுப்பாய்வு அறிக்கையில் ஆல்ஹகால் அல்லது விஷம் கண்டறியப்படவில்லை என குறிப்பிடபட்டிருந்தது.

இறுதி கருத்துரை இறந்தவர் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு வெட்டு காயங்களின் பின் விளைவுகளினால் இறந்திருக்ககூடும் என சான்று வழங்கினேன். நான் தற்போது வழங்கிய சான்று அலுவலக நகல் என்னுடைய கோப்பில் உள்ளது கொண்டுவந்துள்ளேன் அதன் நகலை தாக்கல் செய்கிறேன் அது **ச.சா.ஆ. 1** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் இறுதி அறிக்கை நான் கொடுத்ததுதான் அது **அ.த.சா.ஆ.14** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

காயம் 4 ஒரே வெட்டினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. காயம் எண் 6 சிராய்ப்பு காயம் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் ஆமாம். ஆய்வாளர் கேள்வி பதில் என்ற முறையில் விசாரித்தாரா என்றால் ஞாபகமில்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**